DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 12/2024** |
| Deposition of Witness for | : PW 12 |
| Name | : திரு.ஜெயக்குமார் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th February2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆஜராகி அளித்த சாட்சியத்தை நீதிமன்றம் பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து 2013 ம் வருடம் பணி ஓய்வு பெற்று தற்போது ராமநாதரபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சங்கரன்கோவில் தாலுகா காவல்ஆய்வாளராக பணிபுரிந்தபோது குருவிகுளம் காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் நாராயணன் நிலையப்பொறுப்பில் இருந்தபோது ரத்தினசாமி என்பவர் நிலையம் ஆஜராகி ரத்தினசாமி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் அடிப்படையில் குருவிகுளம் காவல்நிலையக்குற்ற எண்.218/2012 ச/பி.304(A)இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவுசெய்தார். **அந்த புகார் மனு அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த முதல் தகவல் அறிக்கையை 26.09.2012 ம் தேதி 14.45 மணிக்கு பெற்று வழக்கின் சம்பவ இடத்தை 15.00 மணிக்கு சென்று பார்வையிட்டேன். இவ்வழக்கில் இறந்துபோன துரைச்சாமி என்பவர் பிரேதத்தை பார்வையிட்டு

பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பின்னர் பிரேதத்தை இறப்பிற்கான மருத்துவரீதியான காரணத்தை அறியும்பொருட்டு வேண்டுதல் கடிதம் தயாரித்து காவலர் கிருஷ்ணசாமி என்பவர் மூலம் சங்கரன்கோவில்அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அதன்பின்னர் 16.45 மணிக்கு வழக்கின் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சாந்தகுமார் மற்றும் மைக்கேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.10 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அதன்பின்னர் சாட்சிகள் விஜயராஜ், ஞானப்பூ, பால்பாண்டியன் என்ற பாலமுருகன், தனபால், ரத்தினசாமி, பிரபுகுமார், சாந்தகுமார், மைக்கேல் மற்றும் காவலர் கிருஷ்ணசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.09.2012 ம் தேதி காலை 9.30 மணியளவில் காவல்நிலையம் முன்பு ஆஜரான எதிரி அசரப் என்பவரை கைது செய்து தக்க வழிக்காவலுடன் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். வழக்கில் சம்பந்தப்பட்ட KL 01 B 4887 என்ற பதிவெண் கொண்ட லாரியை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு வேண்டுகோள் கடிதம் தயாரித்து அனுப்பிவைத்தேன். 01.10.2012 ம் தேதி விபத்தில் சம்பந்தப்பட்ட TN 76 W 3033 என்ற பதிவெண் கொண்ட Hero Honda மோட்டார் சைக்கிளை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு வேண்டுகோள் கடிதம் தயாரித்து அனுப்பிவைத்தேன். 03.10.2012 ம் தேதி மேற்படி வாகனங்களின் ஆய்வறிக்கை பெற்று மோட்டார் வாகன ஆய்வாளர் வெங்கடகிருஷ்ணனை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 08.10.2012 ம் தேதி சாட்சிகள் ஷாஜகான் மற்றும் பிரேத பரிசோதனை செய்த டாக்டர்.அருள்செல்வி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி டாக்டரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். அதன்பின் புலன்விசாரணை முடித்து எதிரியின் மீது ச/பி304(A)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

அரசுதரப்புபட்டியல் சாட்சி விஜயராஜ் எனது விசாரணையின்போது சம்பவ இடத்திற்கு விபத்து நடந்த நாளன்று மதியம் 1.40 மணிக்கு சென்றதாக கூறினாரா என்றால் கூறினார். சம்பவ இடத்தை நான் மாலை 3 மணிக்கு சென்று பார்வையிட்டதாக எனது விசாரணையில் துலங்கும் என்றால் சரிதான். சாட்சி விஜயராஜ் சம்பவம் நடந்த இடத்திற்கு விபத்து நடந்த நாளன்று மதியம் 1.40 மணிக்கு சம்பவ இடத்தில் யாரும் இல்லாததால் அவர்கள் மருத்துவமனைக்கு சென்றதாக எனது விசாரணையின்போது கூறினாரா என்றால் அவ்வாறு கூறவில்லை. முதல்தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு எந்த தேதியில் சமர்ப்பிக்கப்பட்டதாக எனது விசாரணையில் துலங்கும் என்றால் 26.09.2012ம் தேதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வழக்கின் விபத்து தொடர்பாக சங்கரனகோவில் தாலுகா காவல்நிலையத்தில் வேறு வழக்கு எதுவும் பதிவுசெய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. TN 76 W 3033 என்ற பதிவெண் கொண்ட Hero Honda இருசக்கரவாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 218/2012 என்ற வழக்கு பதிவுசெய்யப்பட்ட காவல்நிலையமாக சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மோட்டார் வாகன ஆய்வாளர் தவறாக குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கிற்கான பிரேத பரிசோதனை அறிக்கையில் குற்ற எண்.218/2012 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்ட காவல்நிலையமாக சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த பிரேத பரிசோதனை அறிக்கையில் சங்கரன்கோவில் என்பது அடிக்கப்பட்டு குருவிகுளம் காவல்நிலையம் என்று திருத்தம் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி திருத்தம் எதிரிக்கு நீதிமன்றத்தின் மூலம் நகல் வழங்கப்பட்டபிறகு ஏற்படுத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. பிரேத பரிசோதனை அறிக்கையில் ஏற்கனவே உள்ள கையெழுத்தும், குருவிகுளம் காவல்நிலையம் என திருத்தி எழுதப்பட்ட கையெழுத்தும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரததில் வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துகொள்ளவில்லை என்றாலும்,சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை பதிவுசெய்யவில்லை என்றாலும்,

பஞ்சாயத்தார் முன்னிலையில் இறந்துபோனவரின் சடலத்தின் மீது பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலுும, விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை உரிய முறையில் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பவில்லை என்றாலும், மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து அவரிடமிருந்து ஆய்வறிக்கைகள் பெறவில்லை என்றாலும், பிரேத பரிசோதனை செய்யவேண்டி முறையாக விண்ணப்பம் கொடுக்கவில்லை என்றாலும், பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை முறையாக விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கையை பெறவில்லை என்றாலும், எதிரியை நான் கூறிய நாள் நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**